1981 ஏப்ரல் 16]

கொல்லிமலையில் சார்பதிவாள அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 757— திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொல்லிமலையில் சார்பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைப்பது பற்றி அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு சீ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, கொல்லிமலையிலே உள்ள பழங்குடி மக்கள் வாழுகின்ற பகுதிகள் 7 பஞ்சாயத்துக்கள் நாமக்கல் வட்டத்திலும் 7 பஞ்சாயத்துக்கள் ராசிபுரத்திலும் சேருகின்றன. அங்கே சார்பதிவாளர் அலுவலகம் சேந்தமங்கலத்திலும் நாமகிரிபேட்டையிலும் தான் இயங்குகின்றன. கொல்லிமலை வாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு பல முயற்சிகளைச் செய்து வருகிறது. ஆகவே இனிமேலாவது அங்கே சார்பதிவாளர் அலுவலகத்தைத் திறக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தற்போது கொல்லிமலை பகுதி வாழ் மக்களுக்கு சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பணிகள் செய்யப்படுகின்றன. ஆனால் கொல்லிமலையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று இதுவரைக்கும் அந்தப் பகுதி மக்களிடமிருந்து வராத காரணத்தினால் எந்தக் கருத்துருவும் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை வைத்துக் கொண்டு பரிசீலனை செய்து விரைவிலே துவக்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 758, 759 மற்றும் 760 அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.